2. அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை ('காவல் துறை' பற்றி குழுவின் பரிந்துரைகள்மீது எடுத்த நடவடிக்கை குறித்து).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளிப்பார்.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, "காவல்துறை" பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் மூன்றும் அறிக்கையை அளிக்கிறேன்.

3. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 24—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து கோரிக்கை எண் 24, மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 24–தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்*@ என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,38,31,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I move the cut motion standing in my name, namely—

"That the allotment of Rs. 2,38,31,600 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100.".

திரு. செ பாலசுப்பிரமணியன்: ஐயா, நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறுவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண். 24–தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,38,31,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. RAMAMOORTHI: Sir, to discuss the explosive situation in factories in and around Madras City because of the Government's labour policy, I move the cut motion standing in my name, namely—

"That the allotment of Rs. 2,38,31,600 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100.".

---

* 103–150-ல் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அமைச்சரின் ஆய்வுரை அச்சிடப்பட்டுள்ளது.

@ 151–157-ம் பக்கங்களில் 11—7—67-ல் பேரவைமுன் வைக்கப்பட்ட ஆங்கில விவர அறிக்கையின் தமிழாக்கம் நான்காவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.